ஆன்மீகச் சிற்றிதழ் - 13

# சிவனொளி



சாமியே

சரணம்

ஐயப்பா

10/-

ஆசிரியர்

திருமலை கந்தா

செய்த தவறை மறைப்பது
இரண்டு முறை தவறு
செய்ததற்கு ஒப்பாகும்.
- தாமஸ் புல்லர் -

அட்டைப்படம் : சிசு



அன்பு செய்
ஆனந்தித்திரு

# சிவனொளி

172, பிரதான வீதி, திருக்கோணமலை

சிற்றிதழ் - 13

2010 - தை

## இதழில்....


- சங்கடங்கள் போக்கும் சபாபதி
- கோலங்கள்
- மனதைக்கட்டுப்படுத்த எளிய வழி
- வீமன் கேட்ட கேள்வி
- திருக்கழுக் குன்ற கழுகுகள்
- மூச்சு
- அகத்தியர் சிவலிங்க கோயில் கங்குவேலி


நற்றுணையாவது நமசிவாயவே



## ஆசிரியரின்....

புத்தாண்டில் சிவனொளி : 13 இதழ் மூலம் உங்களோடு கை குலுக்கிக் கொள்கின்றோம்.

புத்தாண்டு 2010 இன் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

வழமை போல ஆன்மீக சிந்தனைகளோடு - குறுங்கதைகளும் சிவனொளி பக்கங்களை அலங்கரிக்கின்றன.

வாசக, எழுத்தாள நண்பர்களிடம் இருந்து படைப்புக்களை எதிர்பார்க்கின்றோம்.

கங்குவேலி அகத்தியர் சிவன் கோயில் முற்றாக அழிக்கப்பட்ட செய்தி மனதை வருத்துகின்றது. இந்து பெரு மக்களே உங்கள் நிலைப்பாடு என்ன?

உங்களின் கடிதங்களுக்கு எங்களின் நன்றிகள். மறு இதழில் அறிவோம். அறிந்தவற்றை பேசுவோமே!

அச்சு: அஸ்ரா பிரிண்டர்ஸ்
திருக்கோணமலை

# சங்கடங்கள் போக்கும் சபாபதி

- சிசு -

சிவபெருமான் ஏற்று அருளிய திருக்கோலங்களில் மிகவும் முக்கிய இடத்தைப் பெறுவது சபாபதி



திருக்கோலமாகும். நடராஜப் பெருமானைத்தான் சபாபதி என்பார்கள். உயிர்களுக்கு முக்தி அளிப்பதற்காக ஐந்தெழுத்தையே உடலாகக் கொண்டு ஐந்தொழில் இயற்றும் ஆனந்த நடனம் புரியும் நடராஜப் பெருமானின் திரு உருவச் சிறப்பு தென்னாட்டு கலை எழிலுக்கு அரியதோர் எடுத்துக்காட்டு என்று சொல்லலாம்.

நடராஜர் திருத்தலங்களில் சிறப்பிடம் பெறுவது சிதம்பரமாகும். சிதம்பரம் உள்ளிட்ட ஐந்து சபைகள் நடராஜர் தலங்களாக சொல்லப் படுகின்றன.

ஆனந்தக் கூத்தினை ஊன நடனம் எனவும் ஞான நடனம் எனவும் இரண்டு வகையாக கூறுவார்கள்.

## ஊனநடனம்

இறைவனுடைய திருக்கரங்களில் உடுக்கை ஏந்திய கை படைப்புத் தொழிலையும் அபயம் அளிக்கும் கை காத்தல் தொழிலையும் ஊன்றிய திருவடி மறைத்தல் தொழிலையும் எடுத்த பொற்பாதம் அருளல் தொழிலையும் செய்கின்றன என்று கொள்வது ஊன நடனமாகும். உலகை செயல்படுத்த இது நிகழ்த்தப்படுவதாக கூறுவர்.

**கன்னியர் நடராஜர் கோவில்**
**மகா கும்பாபிஷேக**
**சிறப்புக்கட்டுரை**

## ஞான நடனம்

தன்னை வழிபடும் ஞானியர்களைப் பற்றியுள்ள மாயையை உடுக்கை ஏந்திய கை உதறுவதாகவும், அனல் ஏந்திய கை சுட்டெரிப்பதாகவும் ஊன்றிய திருவடி ஆணவத்தை அழிப்பதாகவும் எடுத்த திருவடி அவர்களை ஆனந்தக்கடலில் அழுத்துவதாகவும் கொள்வது ஞான நடனமாகும்.

இவை உண்மை விளக்கத்தில் சொல்லப்பட்டுள்ள செய்திகள் உயிர்களுக்கு முக்தி அளிப்பதற்காக ஞானக்கூத்து நிகழ்த்தும் நிலையை அம்பிகை அருகிலே இருந்து கண்டு மகிழ்வார். பதஞ்சலி, வியாக்ரபாதர் முனிவர்களுக்காக இறைவன் திருநடனக்காட்சி தந்ததாக சிதம்பரத்தில் சம்பிரதாயம் உள்ளது.

நடராஜர் திருமுன்னிலையில் பாராயணம் செய்வதற்கு ஒரு பாடல்:

**திருநாவுக்கரசர் தேவாரம்**


குனித்த புருவமும் கொவ்வைச்
செவ்வாயிற் குமிழ் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல்
மேனியில் பால் வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்த
பொற்பாதமும் காணப் பெற்றால்
மனிதப் பிறவியும்
வேண்டுவதே இந்த மானிலத்தே.

-திருச்சிற்றம்பலம்-

*********************************************************


## பூஜை அறையில் போடும் கோலங்கள்

பூஜை அறையில் பெருமாளும், தாயாரும், சங்குசக்கர தாரியாய் வீற்றிருப்பார் என்று பொருள். இதை தினமும் நாம் போட்டுவந்தால் சகல நன்மைகளும் நம்மை வந்து அடையும்.




ஸ்ரீ ஸீதா ராம ஜயம்
ஸ்ரீ ஸீதா லக்ஷ்மி கடாக்ஷம்

## வாசற்படி கோலங்கள்



தினமும் 108 தாமரை போட்டு வந்தால் சகல சௌபாக்கியங்களும் வரும். அத்துடன் மஞ்சள், குங்குமம் ஏதாவது ஒரு மலர் வைத்து பூஜிக்க வேண்டும். இப்படி செய்தால் நாம் நினைத்த காரியம் சித்தி பெறும்.



ராமர் பாதுகை என்பது பொருள்





ஸ்ரீ சுதர்சன ஆழ்வார் வீற்றிருக்கும் கோலம். இந்தக் கோலத்தை பிரதி தினம் பூஜை அறையில் போட்டு வந்தால் பேய், பில்லி, சூன்யம் பலவிதமான துர்தேவதைகளை அண்ட விடாமல் காக்கும் தன்மை உடையது. வீட்டிற்கு சகல சௌபாக்கியங்களைத் தரவல்லது. இதற்கு சுதர்ஸச சக்கரம் என்று பெயர்.

– ஜெயலக்ஷ்மி –

********************************************************

## மனதைக் கட்டுப்படுத்த எளிய வழி



நான் கீதை படித்துக் கொண்டிருக்கின்றேன். நீங்கள் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள். திடீரென்று ஒரு நாய் உள்ளே வருகிறது. குரைக்கின்றது. பிறகு போய் விடுகிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். அந்த நாயைப் பார்த்து ஏன் உள்ளே வந்தாய் என்று கேட்டால், அதனால் பேச முடிந்தால் வரவேண்டும் என்று தோன்றிற்று வந்தேன் என்ற பதில் சொல்லும். ஏன் குரைத்தாய் என்று கேட்டால் குரைக்க வேண்டும் என்று தோன்றிற்று குரைத்தேன் என்று பதில் சொல்லும். அதாவது அதன் மனது என்ன சொன்னதோ அதன்படி அது செய்யும்.

ஆனால் மனிதர்களாகிய நாம் அப்படியிருக்கலாமா, நாம் நம் மனதை நம் புத்தியைக் கொண்டு கட்டுப்படுத்த வேண்டும். அப்பொழுதுதான் நாம் செய்யும் வினைகள் நிறைவுபெறும் அதன் காரணமாக வெற்றியும் கிடைக்கும். மனச்சாந்தியும் கிடைக்கும் என்பது நம்பிக்கையாகும். எத்தனையோ பணக்காரர்கள் தங்கள் தொழிலில் வெற்றி காண்கிறார்கள். ஆனால்

அவர்களுக்கு மனச்சாந்தி கிடையாது. எத்தனையோ ஏழைகள் மனச்சாந்தியுடன் விளங்குகிறார்கள். ஆனால் அவர்கள் வெற்றி காணவில்லை செயல் பூரண முற்றால் இவை இரண்டும் கிடைக்கும்.

மனது சொன்னதையெல்லாம் நாம் கேட்பதென்றால் அதற்கு ஒரு அளவேயில்லை. அது தீயைப் போன்றது. எத்தனை கட்டளைகளைப் போட்டாலும் அது இன்னும் கொண்டு வா என்று கேட்கும் அதே மாதிரிதான் மனதும் எத்தனை ஆசைகள் நிறைவேறினாலும் மேலும் ஆசைப்பட்டுக் கொண்டேயிருக்கும்.

## ஆசை

ஆசை என்பது ஒரு விதக் கிருமியைப் போன்றது. ஒரு விஷக்கிருமி உடலுக்குள் நுழைந்து விட்டால் போதும் அது கோடிக்கணக்கில் பெருகி கடைசியில் நம்மை அழித்துவிடும் அதே மாதிரி ஒரு ஆசைக்கு இடம் கொடுத்தால் போதும் அது கோடிக்கணக்கில் பெருகி கடைசியில் நம்மை அழித்துவிடும். மனதுக்கு மூன்று குணங்கள் உண்டு. ஒன்று அது நிகழ்காலத்தை விட்டு விட்டு இறந்த காலத்துக்கோ அல்து எதிர்காலத்துக்கோ சென்றுவிடும். இரண்டு எந்தப்பொருள் நம்மிடம் இல்லையோ அது வேண்டும் என்று கேட்கும் மூன்று கிடைத்த பொருள் மீது உரிமை பாராட்ட ஆரம்பித்துவிடும்.

## மனம்

காலத்தின் சூழ்நிலையில் ஒரு மனிதன் மிகப்பெரிய பணக்காரனாக இருந்து ஏழையாக வேண்டிய நிலை ஏற்படுகின்றது. அவன் மனது பெரிதும் பாதிப்படைகிறது. நோயாளியும் நிலையும் ஏற்படுகின்றன. இவைகளை தற்போது கண்ணால் காண்கிறோம் அறிகிறோம். எனவே நம் புத்தியைக் கொண்டு மனதை கட்டுப் படுத்தினால்தான் நாம் பிழைத்தோம். அதற்கு மிக எளிய வழி மனதை உயர்த்த இலட்சியங்களைப் பற்றி சிந்தித்து இறைவனை அடைய எண்ணச் செய்ய வேண்டும். எத்தனை துன்பங்கள் துயரங்கள் வந்தாலும் மனதை நல்வழியில் சிந்தித்து இறைவன் மீது தூய்மையுடன் பக்தி செலுத்தினால் நல்ல பலனை அடையலாம் என்பதை முன்னோர்களின் வரலாறுகளில் இருந்தும் யாம் அறியலாம்.

சரசாலை – க . சிவசங்கரநாதன்




- திருமலை சுந்தா -

குறுங்கதை

பஞ்சபாண்டவர்களில் மூத்தவர் தர்மபுத்திரர். அவர் ஒரு நாள் அரண்மனையில் இருந்த போது தெருவில் பிச்சைக்காரன் ஒருவன் வந்தான்.

அவன் தர்மபுத்திரனைப் பார்த்து பிச்சை கேட்டான். அந்த சமயத்தில் தர்மர் ஏதோ வேலையாக இருந்தார்.

அவரும் பிச்சைக்காரனிடம் கையில் வேலையாக உள்ளேன். நாளைக்கு வா' என்று கூறினார். பிச்சைக்காரனும் 'சரி' என்ற தலையாட்டி விட்டுச் சென்றான்.

அந்தக் காட்சி வீமன் மனதில் எண்ணமொன்றினை உதிக்க வைத்தது. ஒரு முரசை எடுத்துக்கொண்டு ஊர் மக்களை நோக்கி ஓடினான். முரசை அடித்து ஏதோ சொல்ல ஆரம்பித்தான்.

இந்த விபரம் தர்மருக்கும் தெரியவந்தது. அவர் வீமனை அழைத்து 'உனக்கு என்ன நடந்தது? என்று கேட்டார்.

'என் அண்ணன் காலத்தை வென்றவர் என்று மக்களிடம் தெரிவித்தேன்? – என்றான்.

'ஏன் அப்படிச் சொன்னாய்' தர்மரின் பார்வையில் கேள்வி எழுந்தது.

'நீங்கள் பிச்சைக்காரனை நாளைக்கு வரச்சொன்னீர்கள். நாளை அவன் உயிரோடு இருப்பானா? அல்லது நாளை அவன் தங்களை தேடி வருவானா? ஒரு வேளை உயிரோடு நீங்கள் இருந்தாலும் பிச்சையிடும் மனநிலை உங்களுக்கு இருக்குமா?" நிச்சயம் பிச்சை இடுவீர்களா? நாளை அவன் பணக்காரனாகி விட்டால்... நாளை உங்கள் இருவரின் சந்திப்பு நிச்சயம் நடக்குமா? நீங்கள் காலத்தை வென்று விட்டீர்கள். அதனால்தான் அவ்வளவு நிச்சயமாகப் பிச்சைக்காரனை நாளைக்கு வரச்சொல்லியிருக்கிறீர்கள்? என்றான் பணிவோடு வீமன்.

பதிலை கண்களில் சுமந்த தர்மர் வீமனைப் பார்த்து 'தம்பி வீமா நான் பிழை செய்து விட்டேன். நீ உண்மையை உணர்த்தினாய். பரிபூரண சுதந்திரம் பெற்ற மனிதனால் தான் அப்படி வாக்கு தரமுடியும் உடனே அந்த பிச்சைக்காரனைக் கூப்பிடு. ஏதாவது கொடுத்து அனுப்புகிறேன் என்றார்.

நாளை என்ன நடக்கும்! நாளை நடப்பதை எவர் அறிவார். ஊகங்கள் உண்மைகள் அல்லவே! நிகழ் காலமே எங்களுக்குரியது நாளையென்பது பொய்... பொய்...

தர்மரின் மனம் பதைபதைத்துக் கொண்டிருந்தது. அவரின் கண்கள் பிச்சைக்காரனை எதிர்பார்த்து படபடத்துக் கொண்டிருந்தன.

*****************************************************


## திருக்கழுக்குன்ற கழுகுகள் திரும்ப வருமா?

பிட்டுக்கு மண் சுமந்த கதை, பிள்ளைக் கறி சமைத்த கதை என்ற புராணக்கதைகளைக் கேட்கத்தான் செய்திருக்கிறோம். ஆனால், புராணத்தில் சொல்லப்பட்ட ஒன்றை இன்றைக்கும் நேரடியாகப் பார்க்ககூடிய ஒரே இடம் திருக்கழுக்குன்றம்தான். சரியாக மதியம் பன்னிரண்டு மணிக்கு இரண் கழுகுகள் வந்து, மலைக் கோயிலின் முன்பிருக்கும் ஒரு பாறையில் இறங்கி சாப்பிட்டுப் போகும் அதிசயம்தான் அது.

இது வெறும் டூரிஸ்ட் தலம் மட்டும் இல்லை. இங்குள்ள வேதகிரி மலையை 48 நாள்கள் வலம் வந்தால் குழந்தைப் பேறு ஏற்படும் என்ற நம்பிக்கையையும் பெற்ற ஊர் இது.

செங்கல்பட்டிலிருந்து பதின்மூன்று கி.மீ தொலைவிலிருக்கும் திருக்கழுக் குன்றத்தில் கோயிலைச் சுற்றித்தான் வாழ்க்கையே. இரண்டு கோயில்கள். மலை மேலிருக்கும் 'வேத கிரீஸ்வரர் கோயில்', இதயம் போல் அமைந்திருக்கும் பக்தவச்சலேஸ்வரர் கோயில், சந்தனம், ஜவ்வாது, சாம்பிராணி, பூக்கள் விற்கும் கடைகளிலிருந்து, ஜெராக்ஸ், ஸ்டூடியோ, நகை அடகுக் கடைகள் வரை திருக்கழுக்குன்றத்தின் வாழ்க்கைத் துடிப்பே பக்தவத்சலேஸ்வரர் கோயிலைச் சுற்றித்தான். ஓடுகள் வேய்ந்த வீடுகளும், ஒரு பெரிய குளமும், அதைச் சுற்றியிருக்கும் மங்கிய செம்மண் கலரிலான வீதிகளும், கட்டிடங்களும் நம்மை பின்நோக்கிப் 'பழமைக்கு' இழுத்துச் செல்கின்றன.

'பட்சி தீர்த்தம்', 'ருத்திரகோடி' என்று வேறு பெயர்களிலிருந்தாலும் கிட்டத்தட்ட எட்டாம் நூற்றாண்டிலேயே



'திருக்கழுக்குன்றம்' என்றுதான் அழைக்கப்பட்டு வந்திருக்கிறது இந்த ஊர். அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர் என்று நால்வருடைய பாடல்களிலும் 'திருக்கழுக்குன்றம்' இடம் பெற்றிருக்கிறதாம். பெரிய கோயில் என்று நாம் ஏகப்பட்ட கோயில்களைச் சொன்னாலும், 'கோயில்' என்று பாடப்பட்டது இது ஒன்றுதான் என்றார் கோவிலைச் சுற்றிக் காண்பித்த குருக்கள்.

மலையிலிருக்கும் வேதகிரீஸ்வரர் கோயிலுக்கு, ஆயிரத்து முன்னூற்று பதினெட்டு படிகள்! நினைக்கும் போதே மூச்சு வாங்குகிறது. களைப்புத் தெரியாமல் இருக்க கதை சொல்ல ஆரம்பிக்கிறார் குருக்கள். பூஷா, விதாதா என்று இரண்டு முனிவர்கள், அவர்கள்தான் இறைவன் இட்ட சாபத்தால் கழுகுகளாக மாறி, இறைவனை வந்து தரிசித்து விட்டுப் போகிறார்களாம்.

கதையின்படி பிரம்மாவின் மானசீக புத்திரர்கள் எட்டு பேர் நினைத்தபடி வெவ்வேறு வடிவங்கள் எடுக்கும் 'சாருப பதவி' வேண்டி சிவபெரமானை நோக்கி தவம் புரிந்தார்கள். இவர்களின் தவத்தைக் கண்டு சிவபெருமான் அவர்களுக்கு காட்சியளித்து என்ன வேண்டும் என்று கேட்டபோது, "இறைவனின் திருவடிகளை அடையும் சாயுச்சி பதவியடைய உதவுங்கள்" என்றார்களாம். 'சாருப பதவியை' விரும்பி தவம் செய்துவிட்டு, இப்போது 'சாயுச்சி பதவி கேட்கிறீர்கள். இது சிவத்துரோகம் என்று சினம் கொண்ட சிவபெருமான் நீங்கள் எட்டு பேரும் கழுகுகளாக மாறி உழல்வீர்களாக" என்று சாபம் கொடுத்தாராம். இதைக் கண்டு அஞ்சி, விமோசனம் வேண்டி எட்டு பேரும் நின்ற போது, "ஒவ்வொரு யுகத்துக்கும் இருவராகக் கழுகு ரூபத்தில் பிறந்து, தவஞ் செய்து சாருப பதவியைப் பெற்று உய்வீர்களாக" என்று விமோசனம் கொடுத்தாராம். இப்படிப் பிறந்தவர்களில் இந்தக் கலியுகத்தில் கழுகுகளாக வலம் வருபவர்கள்தான் பூஷா, விதாதா என்பவர்கள்.

இந்தக் கழுகு முனிவர்களை வைத்து இன்னொரு கதையும் ஆதாரபூர்வமானதாக - சொல்லப்படுகிறது. மகாவலிபுரத்தை ஆண்ட மன்னன் சூரகுரு என்பவன் வேட்டையாடப் போனபோது, ஒரு முள்ளம் பன்றியை அம்பெய்திக் கொன்றானாம். பன்றியை நோக்கி எய்யப்பட்ட அம்பு ஒரு பசுவையும் கொன்றுவிட்டது. இந்த இரண்டும் இறந்த பிறகு, திலோத்தமை என்ற தேவ கன்னிகையாகவும், ஒரு மனிதனாகவும் உருவமெடுத்தனவாம். என்ன நடக்கிறது என்று புரியாமல் விழித்த சூரகுரு மன்னனுக்கு இந்தக் கழுகு முனிவர்கள்தான் தரிசனம் தந்து, ஒரு

காலத்தில் திருக்கழுக்குன்றத்தில் தவம் செய்து வந்த நந்திதேவரின் கவனத்தைக் கலைக்க இந்திரனால் ஏவப்பட்டவர்கள்தான் இவர்கள் என்று சொல்லி, தவங் கலைந்த கோபத்தில் நந்தி தேவர் இட்ட சாபத்தினால்தான் இப்படி பன்றியாகவும், பசுவாகவும் உருமாறினார்கள் என்று சொன்னார்களாம். கீழேயிருக்கும் பக்தவச்சலெஸ்வரர் கோயிலில் இந்த வரலாற்றைச் சித்தரிக்கும் சிற்பங்கள்தான் இருப்பதாகச் சொன்னார் நம்முடன் வந்த குருக்கள். மலைக் கோயிலிலும் இந்த சிற்பங்களைப் பார்க்க முடிகிறது. மலையின் மீது கழுகுகளால் உண்டாக்கப்பட்ட தீர்த்தம்' என்றழைக்கப்படும் இதைத்தவிர கிட்டத்தட்ட 12 தீர்த்தங்கள் இருக்கின்றனவாம்.

மலைக் கோயிலின் உள்ளிருக்கும் சிவலிங்கம், தேவர்கள், முனிவர்கள், மானுடர்கள் எல்லாரும் பூஜித்த பெருமையுடையது என்கிறார் குருக்கள். கருவறைக் கோபுரக் கலசத்தின் மேல் துவாரம் ஒன்றிருக்கிறது. இடி விழும் போது, துவாரத்தின் வழியே உள்ளே பாய்ந்து, சிவலிங்கத்தைச் சுற்றி வெளிச்சம் ஏற்படுத்துமாம். இந்திரன் சிவ வழிபாடு நடத்துகிறான் என்பது அதற்கான அர்த்தம் என்கிறார்கள் ஐதீகப்படி.

கீழேயிருக்கும் 'தாழக் கோயில்' என்றழைக்கப்படும் பக்தவச்சலேஸ்வரர் காலத்தில் கட்டப்பட்ட கோயில், தாழக் கோயிலில் உள்ள திரிபுர சுந்தரி அம்மன் ரொம்ப விசேஷம் என்கிறார்கள். கண், மூக்கு, வாய் என்று முழு உருவில் இல்லாமல், எப்படி 'நிழல் விழுமோ அந்த நிழல் ரூபத்தில் இருக்கிறாளாம் திரிபுரசுந்தரி அம்பாள். கல்லால் ஆன வடிவமாக இல்லாமல், ஒரு மருந்துக் கலவையாக அம்பாள் இருப்பதால் ஆண்டுக்கு இரண்டு முறை தான் அபிஷேகம் செய்யப்படுகிறது என்று சொல்கிறார் குருக்கள்.

பக்தவத்சலேஸ்வரர் கோயிலில் ஒரு பக்கத்தில், சங்குகள் வைக்கப்பட்டிருக்கின்றன. இந்தச் சங்குகள் எல்லாம் பன்னிரெண்டு வருஷத்துக்கு ஒரு முறைதான் பிறக்குமாம். சங்கு தீர்த்தம் என்றழைக்கப்படும் குளத்தில் இப்படி சங்கு (பூப்பதும்) பிறப்பதும், எடுப்பதும் விசேஷமான நிகழ்ச்சிகள். சங்கை எடுத்து காதில் வைத்துக் கேட்டால் 'ஓம்' என்று சொல்லும் சங்கு என்று விளக்குகிறார்கள்.

கோயிலுக்கு உள்ளேயே ஒரு குளம் இருக்கிறது. அடர்ந்த மரங்களுடன், வெறும் 'பறவைகளின் ஒலி' மட்டுமே கேட்கும் அதன் ரம்மியமான, அமைதியான சூழலில் ஒரு பத்து நிமிடம் உட்கார்ந்தால், வேறு பிரச்சினைகள் எதுவும் ஞாபகத்திற்கு வராமல் ஒரு மன அமைதி கிடைக்கிறது. மெல்ல எழுந்து நடக்கும்போது குருக்கள் சொல்கிறார் "ஆனா பாருங்க, இப்பெல்லாம் கழுகுகள் வர்றதில்லை. நாலைந்து வருஷமா, என்ன கோபம்னு தெரியலை, இல்லை வேற ஏதாவது காரணமா தெரியலை, கழுகுகள் வராத திருக்கழுக்குன்றமா ஆயிடுமோன்னுதான் பயமாயிருக்கு.

அப்படி என்ன கோபம் கழுகுகளுக்கு?

- குமரகுருபரன் -

# மூச்சு

– குறுங்கதை –

பேசும் சக்தி, கேட்கும் சக்தி, பார்க்கும் சக்தி, சிந்தனை சக்தி, மூச்சு சக்தி – இந்த ஐந்து சக்திகளும் ஒரு நாள் சந்தித்தன. எல்லாரையும் ஒரு முறை பார்த்துவிட்டு, பேச ஆரம்பித்தது பார்க்கும் சக்தி. "நான் இல்லா விட்டால், மனிதனால் பார்க்க முடியாது. என் சக்தியே அவனுக்கு முக்கியம்" என்றது.

கூர்ந்து கேட்டுக்கொண்டிருந்த கேட்கும் சக்திக்கு கோபம் வந்தது. "பார்வையற்றவர்கள் பலர் நன்றாக வாழ்கின்றனர். காதுதான் முக்கியம். காது கேட்காவிட்டால், மற்றவர்கள் சொல்வது எதையும் கேட்க முடியாது. மனிதன் ஜடமாகிவிடுவான்" என்றது.

பேசும் சக்தி தொண்டையை கனைத்துக்கொண்டது. "பார்ப்பதையும் கேட்பதையும் விளங்கவோ, அது பற்றி பேசவோ பேச்சு சக்திதானே அவசியம்? நான் இல்லாமல் நீங்கள் மட்டும் இருப்பதால் பயனில்லை" என்றது.

சிந்தனை சக்தி எழுந்தது "நீங்கள் எல்லாரும் கருவிகள் நான் சொன்னதைச் செய்பவர்கள். நான் இல்லாவிட்டால் மனிதன் செயலிழந்து விடுவான் மைபத்தியமாகி விடுவான். அப்புறம் நீங்கள் இருந்தென்ன? இல்லாமல் என்ன?" என்றது.

மூச்சு சக்தி பேசாமல் இருந்தது. "ஏன் பேசாமல் இருக்கிறாய்?" என்று மற்ற சக்திகள் கேட்டன. "சாதனையென்று சொல்வதற்கு எதுவும் இல்லை. பேசவில்லை" என்றது மூச்சு சக்தி.

மற்ற சக்திகள் கிண்டல் செய்தன. "மூச்சு விடுவதால் எந்த பயனும் இல்லை. மூச்சு சக்தியை யாரும் ஒரு பொருட்டாகவே மதிப்பதில்லை" என்றன.

'யார் உயர்ந்தவர்?" என கடவுளிடம் கேட்க முடிவு செய்தன. கடவுளை சந்தித்தன.

"எங்களில் உயர்ந்தவர் யார்? மனிதனுக்கு முக்கியமாக தேவைப்படுவது எந்த சக்தி? என கூறவேண்டும்" என்றன.

"ஒரு பரீட்சை வைக்கிறேன். ஒவ்வொரு சக்தியும் மனிதனிடம் இருந்து ஒரு மாதம் விலகியிருக்க வேண்டும். அதாவது, ஒரு மாதம் மட்டும் வேலைநிறுத்தம் செய்ய வேண்டும். யாரை இழந்து மனிதன் கஷ்டப்படுகிறானோ, அந்த சக்தியே உயர்ந்தது" என்றார் கடவுள். ஐந்து சக்திகளும் ஒப்புக்கொண்டன.

> ஒவ்வொரு சக்தியும் மனிதனிடம் இருந்து ஒரு மாதம் விலகியிருக்க வேண்டும். அதாவது ஒரே ஒரு மாதம் மட்டும் வேலை நிறுத்தம் செய்ய வேண்டும்....

முதல் மாதம் கேட்கும் சக்தியை இழந்தான். எல்லாரும் அவனை 'காது கேளாதவன்' என்று கேலி செய்தனர். ஆனாலும், வழக்கம் போல தன் வேலைகளைப் பார்க்க ஆரம்பித்தான். அடுத்த மாதம் கேட்கும் சக்தியை திரும்பப் பெற்றான். பார்க்கம் சக்தி நின்றது. 'பார்வையற்றவன்' என்றனர். ஆனாலும், மற்ற வேலைகள் எதுவும் நிற்கவில்லை.

மூன்றாவதாக பேச்சு சக்தி நின்றது. 'பேசும் சக்தியற்றவன்' என்றனர். சைகை மூலம்

பேச ஆரம்பித்தான். அடுத்ததாக, சிந்தனை சக்தி நின்றது. பைத்தியமானான் மனிதன். மற்றவர்கள் ஒதுக்கினர். கவலையின்றி திரிந்தான். உயிர் வாழவோ, சாப்பாட்டுக்கோ அவன் கஷ்டப்படவில்லை.

ஐந்தாவது மாதம். இது மூச்சு சக்தி வேலை நிறுத்தம் செய்ய வேண்டிய முறை. எல்லா சக்திகளும் சிறப்பாக செயல்பட்டுக்கொண்டிருந்தன. மூச்சு சக்தி திடீரென வேலை நிறுத்தம் செய்தது. அவ்வளவுதான் அதுவரை ஒழுங்காக செயல்பட்டுக்கொண்டிருந்த சக்திகளால் எதுவும் செய்ய முடியவில்லை. அவன் வாழ்க்கை அடங்கிவிட்டதாக கூறி, உடலை ஊரார் எரித்து விட்டனர்.

கடவுள் தோன்றினார். "மனிதனுக்கு மிக மிக அவசியமான சக்தி எது என்று புரிந்திருக்குமே" என்றார். நான்கு சக்திகளும் தலைகுனிந்து நின்றிருந்தன. மூச்சு சக்தி அப்போதும் அடக்கமாய் நின்றிருந்தது.

– தி. பிரியந்தி –

******************************************************

## திருமலை மாவட்டத்தில் வரலாற்றுச் சான்று பகரும்

# அகத்தியர் சிவலிங்க கோயில்

இலங்கை வரலாற்றிலே கிழக்கு மாகாணம் தனியான வரலாற்றுச் சான்றுகளை தன்னகத்தே கொண்டமைந்த ஓர் மாகாணமாகும். அதிலும் குறிப்பாக மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்கள் இந்து கலாச்சார விழுமியங்களை பேணிப்பாதுகாத்த வரலாறுகள் தற்போதும் புலனாகின்றன. அதிலும் திருகோமலை மாவட்டத்தில் கங்குவேலி எனும் இடத்தில் மிகவும் பழைமை வாய்ந்த அகத்தியர் சிவலிங்க கோவில் அமையப்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் கடந்த வன்செயல் காரணமாக இவ்வாலயத்தின் வழிபாடுகளை மேற்கொள்வதில் பெரும் சிரமம் ஏற்பட்டது. தற்போது இவ்வாலயத்தின் வழிபாடுகளை மேற்கொள்வதில் பெரும் சிரமம் ஏற்பட்டது. தற்போது இவ்வாலயத்தின் நிருவாக சபையினர் ஒன்றிணைந்து ஆலயத்தினை புனரமைப்புச் செய்து திருவிழாக்களை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றார்கள்.

கங்கு கோயிலில் அமைந்துள்ள அப்புராதன ஆலயம் பல வரலாற்றுக் கதைகளோடு தொடர்புடையதாக அமைந்திருக்கின்றது. தொல் பொருள் ஆய்வினை மேற்கொள்ளும் பட்சத்தில் பல வரலாற்றுச் சான்றுகளையும் நாம் தெளிவாக அடையாளம் கண்டு கொள்ளக் கூடியதாக இருக்கும். ஆடி அமாவாசை தீர்த்தத்தினை கொண்டமைந்து திருவிழாக்களை நடாத்தி வந்திருந்த போதிலும் அண்மைக்காலமாக பூரண வழிபாடுகள் இடம் பெறாமல் இருப்பதால் அப்பிரதேச மக்கள் பெரும் கவலை கொள்கிறார்கள். இவ்வாலயத்தின் சிறப்பு தலபுராணத்திலும் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.